இந்தியாவின் பொருளாதாரத்தை மாற்றியமைத்த மாபெரும் தலைவர்! முன்னாள் பிரதமர்

# டாக்டர் மன்மோகன் சிங்கிற்கு நினைவகம் கட்டுவதற்குரிய இடத்தில் இறுதிச் சடங்கிற்கு பா.ஜ.க. அரசு மறுத்திருப்பது ஆணவச் செயல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை, டிச. 29-**

**முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு நினைவகம் கட்டுவதற்குரிய இடத்தில் அவரது இறுதிச் சடங்குகளைச் செய்ய பா.ஜ.க. அரசு அனுமதி மறுத்திருப்பது ஆணவச் செயல் மட்டுமல்ல மன்மோகன் சிங்கின் தொண்டையும், அவரது சமூகத்தையும் அவமதிக்கும் செயலாகும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களின் குடும்பத்தார் அவருக்கு நினைவகம் கட்டுவதற்குரிய இடத்தில் அவரது இறுதிச் சடங்குகளைச் செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கோரியதை பா.ஜ.க. அரசு நிராகரித்துள்ளது. இது அவரது உயர்ந்த தொண்டையும், அவரது சீக்கிய சமூகத்தையும் நேரடியாகவே அவமதிக்கும் செயலாகும்.

அவரது குடும்பத்தார் வைத்த கோரிக்கையை மறுத்து, இரு முறை பிரதமராக இருந்த தலைவரின் இறுதிச் சடங்கு நிகழ்வைச் சாதாரணமாக நிகம்போத் காட்டில் வைத்து நடத்தியிருப்பது ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஆணவத்தையும், பாரபட்சத்தையும் காட்டுகிறது. இது, அவரது பெரும் பங்களிப்புகளை மக்களின் நினைவில் இருந்து அகற்ற முனையும் அப்பட்டமான முயற்சியாகும்.

டாக்டர் மன்மோகன் சிங் அவர்களது தலைமை இந்தியாவின் பொருளாதாரத்தை மாற்றியமைத்துக் கோடிக்கணக்கான மக்களை வறுமையின் பிடியில் இருந்து மீட்டெடுத்தது. இத்தகைய உயர்ந்த தலைவரை அவமதிப்பது என்பது இந்தியாவின் முன்னேற்றத் தையே அவமதிப்பதற்குச் சமமாகும். பெருந்தலைவர்களை அவமதிக்கும் கறை வரலாற்றில் இருந்து என்றும் மறையாது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி சைதை மேற்கு 139 (அ) வட்டத்தில் வட்டபொருளாளர் பூபதி வெங்கடேசன் தலைமையில் பகுதி செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி எம்.சி., பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., வட்டசெயலாளர் சை.மு.சேகர் ஆகியோர் முன்னிலையில் உதயநிதியின் உதயநாளை முன்னிட்டு நடைபெற்ற தெருமுனைக்கூட்டத்தில் 1000 பயனாளிகளுக்கு நல உதவிகள் வழங்கி கழக சொற்பொழிவாளர் கோவி.லெனின், இளம் சொற்பொழிவாளர் வெ.சரண்யா ஆகியோர் சிறப்புரையாற்றினர். பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், த.சம்பத், வட்ட செயலாளர் அட்கோ கமலநாதன், மாவட்ட அமைப்பாளர் எம்.எஸ்.ஹரிபாபு, ஆர்.கிருஷ்ணகுமார், நா.மணிகண்டன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.

---

கழக மாநில மீனவர் அணி சார்பில் - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. தலைமையில்

# சுனாமியில் சிக்கி உயிர்நீத்தவர்களுக்கு நினைவஞ்சலி - 5000 பேருக்கு நல உதவிகள்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி - அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினர்!

*சென்னை, டிச.29-*

*தமிழ்நாடு முதல்வர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதல்வர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி சுனாமி ஆழிப் பேரலையில் சிக்கி உயிர் நீத்த மீனவ சொந்தங்களுக்கு கழக மாநில மீனவரணி சார்பில் மாநில மீனவரணி துணைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் திருவொற்றியூர் கே.பி.சங்கர் தலைமையில் 200க்கும் மேற்பட்ட பெண்கள் பால் குடம் ஏந்திச் சென்ற அமைதி ஊர்வலத்தை கழக அமைப்புப் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி துவக்கி வைத்து 3000க்கும் மேற்பட்டவர்களுடன் கே.வி.கே. குப்பம் கடற்கரையில் அஞ்சலி செலுத்தினார்.*

*பின்பு நடைபெற்ற நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் சிறுபான்மை நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் ஆகியோர் ஏழை எளிய உழைக்கும் மக்கள் 24 பேருக்கு தையல் இயந்திரம், 5 பேருக்கு இஸ்திரிப் பெட்டி, அரசு பள்ளியில் பயின்று தேசிய அளவில் புதுடெல்லியில் நடைபெற்ற குத்துச் சண்டை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவி நித்திய ஸ்ரீ அவர்களுக்கு ஊக்கத்தொகையும், பார்வை திறன் குறைபாடு கொண்ட மாற்றுத்திறனாளி ஜீவாவுக்கு உதவி தொகையும், நிகழ்வில் கலந்து கொண்ட 5000 பெண்களுக்கு அரிசி, புடவைகள் வழங்கினார்கள்.*

*இதில் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ராமநாதன், கழக பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், மத்திய பகுதி பொருளாளர் எம்.எஸ்.நாகலிங்கம், முன்னாள் பகுதி துணைச் செயலாளர் இ.ரமேஷ், துர்கா கோதண்டம், வட்டக் கழக செயலாளர்கள் ஆர்.சந்தர், ஏகா. கார்த்திகேயன், தச.கரிகால சோழன்,*

*14 வது வட்ட மாமன்ற உறுப்பினர் பானுமதி சந்தர், கோமதி சந்தோஷ்குமார், மாவட்ட காங்கிரஸ் தலைவரும், மாமன்ற உறுப்பினருமான சாமுவேல் திரவியம், மாவட்ட பிரதிநிதி கே.கார்த்திகேயன், சந்தான கிருஷ்ணன், எத்திராஜ், அப்துல் சலீம், ஸ்டாலின், கழகப் பேச்சாளர்கள் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, எழும்பூர் கோபி, வாசு கருணாநிதி, டெய்லர் மணி, வழக்கறிஞர் நா.ஜெய்சங்கர், இளையவன் சங்கர்,*

*மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் கே.தேசிங், துணை அமைப்பாளர்கள் எஸ்.செல்வம், டி.அல்லி முத்து, தமிழ்ச்செல்வன், ஆர்.குமரன், ஜி.முரளி டி.தேசப்பன், எம்.எல். வேலன், எம்.ரமேஷ், இரா. பிரகாஷ், டி. மகேந்திரன், மாவட்ட வர்த்தக அணி துணைத் தலைவர் பிரிட் சுரேஷ், மாவட்ட அயலக அணி கார்த்தி, திரு வள்ளூர் கிழக்கு மாவட்ட சிறுபான்மையினர் அணி அமைப்பாளர் அ. அலவி, சென்னை வடக்கு மாவட்ட மீனவரணி தலைவர் எஸ்.கே.இளங்கோ, துணை அமைப்பாளர் சுரேஷ்,*

*ஜே.ஆர்.டி. சேகர், எம்.கார்த்திக், சேகர், எஸ். முகுந்தகுமார், மணலி ரவி, வசந்தராஜ், கே.எஸ்.ஆனந்தன் கருணாநிதி, எம்.எஸ்.பாண்டியன், உதயகுமார், எல்லப்பன், ரவிச்சந்திரன், பிரேம், மணலி எழில், நேரு நகர் எம்.இளங்கோவன், ஜெ.திலகர்,*

*போட்டோ செந்தில், அன்பு செல்வம், மதுரை முத்து, ஜோதி, சோமசுந்தரம், மூர்த்தி, சாலை சுரேஷ், புதியவன், இரா.கணேசன், எஸ்.கே.ராஜ், ராஜேந்திரன், எஸ். விஜயராகவன், வே. கோபால், கே. ரமேஷ், ஜி.கஜேந்திரன் யூ.சார்லஸ் ஒய். ஃபாரூக் ஜி.விஜயலட்சுமி கே.செந்தில் பி.முத்து கருப்பன், டி.எஸ்.பாபு டபிள்யு பீட்டர் சி.சுப்பிரமணியன் கே.சரவணன் எம்.வி.வசந்த் கே.பாலு எச்.அலெக்ஸ் எம்.குமார் ஆர். குணசேகரன் பி.ராஜேஸ்வரி எம். அனிதா, சாவித்திரி, விஜயா, டி.ரமேஷ், கே.தேவராஜ், எஸ். ஈசாக், மகேந்திர பாபு, ஆர்.எம்.செல்வம், சண்முகநாதன், என்.தன்ராஜ், பிரதீப், திவாகர், எம். செல்வம், சின்ன குப்பம் வேலு, மகளிர் அணி புனிதா, சந்திரலேகா, ஹேமலதா, தொமுச ராஜவேல், எஸ்.விஜயராகவன், எம்.டி.சி. சின்னா,*

*இப்ராஹிம், லோகநாதன், சண்முகம், செந்தில், ஜி.மோகன், புனிதா, சந்திரலேகா, ஹேமலதா, வாசுகி, செல்வம், மீனா, விமல், அஜித், சிவா, குப்பன், முரளி, ஸ்ரீதர், ராஜேஷ், சதீஷ், சந்தோஷ், நரேஷ், சரண், சண்முகம், இளங்கோ, சங்கர், அன்பு செல்வம், அருண், ஜோசப், பிரதீப், பிரசாந்த, சூர்யா, கமல், ராஜா, அரவிந்தன், இளம்பரிதி, சந்தீப் மற்றும் எம்.ஆர்.எப். மனுவேல் லாரன்ஸ், ஜெகநாத் பிரபு, மனிதவள மேலாளர் ஆல்பர்ட் டேனி, குடும்ப நல ஒருங்கிணைப்பாளர் கண்மணி மற்றும் கழக தோழர்கள் பொதுமக்கள்கள் திரளாக கலந்துகொண்டனர்.*

*இறுதியாக வட்ட கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் நன்றி தெரிவித்தார்.*

---

திரு.வி.க.நகர் தொகுதியில் உள்ள

# நல்ல மேய்ப்பன் லூத்தரன் ஆலைய நூற்றாண்டு விழா!

## அமைச்சர் சா.மு.நாசர் - ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, டிச.29-

2024 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி நூற்றாண்டைக் குறிக்கும் வகையில் அயனாவரம், மேடவாக்கம் டேங்க் சாலையில் அமைந்துள்ள நல்ல மேய்ப்பன் லூத்தரன் சர்ச், இந்தியா எவாஞ்சலிகல் லூத்தரன் சர்ச் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் தொடங்கப்பட்டது.

1924-ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி கட்டப்பட நல்ல மேய்ப்பன் லூத்தரன் சர்ச், இந்தியா எவாஞ்சலிகல் லூத்தரன் சர்ச் நூற்றாண்டை எட்டியுள்ள நிலையில் புதுப்பிக்கப்பட்டு மீண்டும் துவங்கப்பட்ட நிகழ்வு 26.12.2024 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறுபான்மையினர் நலன் (ம) வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் மற்றும் திரு.வி.க.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ., மாநில சிறுபான்மையினர் ஆணைய தலைவர் திருத்தந்தை. சி.ஜோ அருண் எஸ்.ஜெ., மாநில சிறுபான்மையினர் துறை துணை இயக்குனர் எஸ்.ஷர்மிலி, வார்டு 75 நகராட்சி ஆலோசகர் டி.ரமணி லோகேஷ், IELC தலைவர் Rev.DR. ஜெ.பிரீஸ்ட்லி பாலசிங், IELC தலைவர் ஆம்பூர் ஆயர் Rev.எம்.இம்மானுவேல் சபாபதி, போதகர்.ஜி.எஸ்.எல்.சி Rev.S. ஸ்டான்லி ஜோசப், ஜனாதிபதி ஜே.சேகர் வீரகேசரி, செயலாளர். ஆர்.வின்சென்ட் ஜெயகரன், பொருளாளர் எஸ். சாமுவேல் சதீஷ், INTECH DECORS சிவில் ஒப்பந்ததாரர் வி.பால் ரகு மற்றும் சபையினர் கலந்து கொண்டனர்.


